# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 02.07.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்றும் லாஹூர் பள்ளிவாயில்களில் ஷஹீதாக்கப்பட்டவர்களின் நற்குறிப்புகளே தொடரும்.

இன்றைய பட்டியலில் முதலில் இடம்பெற்றிருப்பவர் **அப்துர் ரஹ்மான் சாஹிப் ஷஹீது.** இவர் ஜாவிது அஸ்லம் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூம் தமது தாயார், சிற்றன்னை, இளைய சகோதரி ஆகியவர்களுடன் ஆகஸ்டு 2008 -ல் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டனர். புதிய அஹ்மதியாவார். ஆனால் அவர் ஹிக்மத்தான முறையில் சில காரணங்களுக்காக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதை உடனே வெளிக்காட்டவில்லை.

M.B.B.S. படித்து முடித்து விட்டு மற்ற உறவினர்களிடம் தெரிவிக்கலாம் என்று ஷஹீது மர்ஹூம் நினைத்திருந்தார். தாய்வழிப்பாட்டனார் வீட்டில் இவரது தாய்வழிப் பாட்டனார் தவிர அனைவரும் அஹ்மதிகளாகி இருந்தனர். இவரது தாய்வழிப்பாட்டி ஸையிதா சாஹிபா அவர்கள் தூய அஹ்மதிப் பெண் ஆக இருந்தார். பெஹஸ்தி மக்பராவில் அடங்கப்பட்டுள்ளார். பெரும் எதிர்ப்பின் காலத்தில் கூட அஹ்மதிய்யத்துடன் தொடர்பு வைத்திருந்தார். ஷஹீது மர்ஹூமுடைய வயது ஷஹாதத்தின் போது 21. தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். சம்பவத்தன்று கல்லூரியிலிருந்து நேராக மஸ்ஜித் தாருஸ் ஸிக்ர் வந்தடைந்தார். மஸ்ஜிதின் மெயின் ஹாலில் அமர்ந்திருந்தார். தாயாருக்கு போன் செய்து, குண்டுகள் பாய்ந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்றார். கூடவே தாம் சிற்றன்னையின் மகனுக்கு போன் செய்து, நான் ஷஹீதாகி விட்டால் என்னை ரப்வாவில் அடக்கம் செய்ய வேண்டும் என்று கூறினார். மற்ற உறவினர்கள் தமது ஜனாஸாவை ரப்வாவுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கமாட்டார்கள் என்று நினைத்திருந்தார். ஷஹீது மர்ஹூமுக்கு மூன்று குண்டுகள் பட்டிருந்தன. அதில் ஷஹீதாகி விட்டார். குடும்பத்தின் இன்னும் சில உறுப்பினர்கள் கூட ஷஹீதாகி உள்ளனர். மலக் அப்துர் ரஷீத் சாஹிப், மலக் அன்சாருல் ஹக் சாஹிப், மலக் சுபைர் அஹ்மது சாஹிப் ஆகியோர் அடங்குவர்.

சம்பவத்திற்குப் பிறகு குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுக்கு தெரிய வந்த போது இவரது சிற்றன்னை ஓர் அஹ்மதி என்பதால் அவரது கணவர் வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார். இவரது முஹல்லாவிலும் கடும் எதிர்ப்பு தோன்றியுள்ளது. மிரட்டல் விடுக்கப்படுகின்றன. அல்லாஹ் இவர்கள் எல்லாரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக!

ஜனாஸா தொழுகைக்காக வீட்டில் பெரும் கூச்சல் எழுந்தது. ஷஹீது மர்ஹூமின் சின்னம்மாவின் கணவர் ஜமாஅத்திற்கு பெரும் எதிர்ப்பு தெரிவிக்கக் கூடியவர். இவரது மற்ற உறவினர்களை அழைத்து இங்கேயே ஜனாஸா தொழ வேண்டும் என்று கூறினர். அப்போது இவரது சிற்றன்னை எழுந்து மிகவும் அழுத்தமாக தனது தைரியத்தை வெளிப்படுத்தியவாறு, இல்லை. பையன் எனக்கு போன் செய்து ரப்வாவுக்கு எடுத்துச் சென்றுவிட வேண்டும் என்று கூறியுள்ளான். எனவே ரப்வாவுக்கு எடுத்துச் சென்று விட வேண்டும் என்று கூறினார். ஷஹீது மர்ஹூமின் தந்தையார் தற்சமயம் பைஅத் செய்யவில்லை. அவரது நடவடிக்கைகள் எப்போதும் கடுமையாக இருந்தது. ஆனால் முன்பை விட இப்போது சற்று மென்மையாக நடந்து கொண்டார். ஷஹீதின் தாயார், என்னை (ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்) கண்டுள்ளார். நான் அவர்களது வீட்டிற்கு சென்றிருக்கின்றேனாம். இவரது உறவினர் ஒருவர் கண்ட ஒரு கனவில், ஐந்து கலீஃபாக்களின் போட்டோக்களும் உள்ளன. ஒரு பாதை அமைக்கப்பட்டுள்ளது. அதில் This is the right way என்று எழுதப்பட்டுள்ளது என கனவில் கண்டுள்ளார்.

நான் கூறியது போன்று, ஷஹீது அவர்கள் முதலாமாண்டு M.B.B.S. படித்துக் கொண்டிருக்கிறார். இவருக்கு படிப்பின்மீது நல்ல ஆர்வம் இருந்தது. பெரியவர்களுக்கு தொண்டு செய்வதில் ஆர்வம் கொண்டவர். செயல்வீரராக வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க வேண்டும். திக்கற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. இவரது தாய்வழிப்பாட்டியின் பெயரில் ஸையிதா Old House என்ற பெயரில் முதியோர் காப்பகம் உருவாக்க வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. நான் ஏற்கனவே கூறியது போன்று இவரது குடும்பத்திலும் முஹல்லாவிலும் கடும் எதிர்ப்பு காணப்பட்டது. ஷஹீதின் தாயார் நம்மிடம், துஆவுக்காகவும் கேட்டுக் கொண்டுள்ளார். உறுதியான பாதத்தை அவருக்கு வழங்குவானாக! எல்லா விஷமங்களிலிருந்தும் பாதுகாப்பானாக! எந்த அளவுக்கு எதிர்ப்பு எனில் இரங்கல் தெரிவிப்பதற்காக அவரது வீட்டிற்கு கூட போக முடியவில்லை. ஷஹீது மர்ஹூம் புதிய அஹ்மதியாக இருந்த போதிலும் உறுதியான நிலை நின்றார். நிச்சயமாக அல்லாஹ், அவனது ரஸூல் மீது குறிப்பான ஒரு தொடர்பு அவருக்கு இருந்தது. அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அடையாளம் கண்டு கொண்டார். அவருக்கு ஸலாமை எட்ட வைத்தார். தமது உயிரையும் அர்ப்பணித்தார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக!

அடுத்து **நிஸார் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் குலாம் ரஸூல் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் மூதாதையர் நாருவால் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். இவர்களது தாதா முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார். அம்ரிஸ்தரைச் சேர்ந்த இவர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். ஷஹீது மர்ஹூம் தனது 17 வது வயதில் லாஹூர் வந்தார். அஷ்ரஃப் பிலால் சாஹிப் என்ற இந்த சம்பவத்தில் ஷஹீதாகியவரின் தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 46. இவர் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். தாருஸ் ஸிக்ர் மஸ்ஜிதில் அஷ்ரஃப் பிலால் சாஹிபை காப்பாற்றியவாறு ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். பொதுவாக தாருஸ் ஸிக்ரில் தான் ஜுமுஆ தொழுவார். பையன்களையும் உடன் அழைத்து வருவார். சம்பவத்தன்றும் பையன்களை அழைத்து வந்தார். ஜுமுஆ தொழுகைக்கு முன் சதகா கொடுப்பது இவரது வழக்கமாக இருந்தது. குழந்தைகளுக்கும் அதனை போதித்து வந்தார். அதில் நற்பயன் உண்டு என்று கூறி வந்தார். சம்பவத்தன்றும் சதகா கொடுத்தார். இவரது மகன் தன் சார்பாகவும் சதகா கொடுக்குமாறு கேட்டார். மகனே! நீ உன் கையால் கொடு என்று கூறினார். பிறகு அந்த மகனுக்காகவும் சதகா கொடுக்கப்பட்ட ரசீது ஒன்று இவரது பாக்கெட்டில் இருந்தது. துப்பாக்கி சூட்டின் போது அஷ்ரஃப் பிலால் சாஹிப் கடுமையான காயமுற்றார். அவரைக் காப்பாற்றுவதற்காக அவரது மேலே படுத்து விட்டார். அப்போது தீவிரவாதி தொடர்ந்து இவர் மீது சுட்டுக் கொண்டே இருந்தான். இவரது இடுப்பு சிதைந்து போனது. அதே இடத்தில் ஷஹீதானார். ஷஹீது மர்ஹூம் பத்து நாட்கள் முன்பு கனவில், காலம் சென்ற தன்னுடைய பெற்றோர்களை சந்தித்தார். மகனே! எங்கள் அருகில் வந்து உட்கார் என்று அவர்கள் இவரிடம் கூறுகின்றனர்.

வீட்டினர் கூறுகின்றனர்: தஹஜ்ஜுத் மற்றும் இதர தொழுகைகளை முறைப்படி தொழுது வருபவராக இருந்தார். திருமணமாகி 25 வருடங்களில் ஒரு கடும் சொல் கூட சொன்னதில்லை. இரண்டு பையன்களையும் வக்ஃபே நவ் என்ற அருளுக்குரிய திட்டத்தில் இணைத்திருந்தார். பெற்றோர் உயிருடன் இருக்கும் போது முழுமையாக சேவை செய்தார். படைப்பினங்களுக்கு சேவை செய்வதில் நல்ல ஆர்வம் உள்ளவர். அஹ்மதிய்யத்தின் மீது நல்ல உணர்வு உள்ளவர். இவரது மூதாதையர் ஊரில் இவரது வீடு மட்டுமே அஹ்மதி வீடாக இருந்தது. ஒருமுறை எதிரிகள் பொதுக்கூட்டம் நடத்தினர். ஜமாஅத்திற்கு எதிராக ஒலிபெருக்கியை சப்தமாக வைத்து இழிவான சொற்களை கூறினார். இரவு நேரமாக இருந்தது. மறைவாக வீட்டை விட்டு வெளியேறி அவர்களிடம் சென்று, இந்த வசை மொழியை நிறுத்துங்கள். ஏதாவது பேச வேண்டும் என்றால் என்னோடு வந்து பேசுங்கள் என்று கடுமையாக கூறினார். உடனே எதிரிகள் சப்தமாக வைத்த ஒலிபெருக்கியை அணைத்தார்கள். வீட்டிற்கு திரும்பி வந்ததும் மனைவி கூறினார்: தனியாக போய் விட்டீர்கள்! எதிரிகள் அதிகமான பேர் உள்ளனரே? உங்களை அடித்து நொறுக்கத் தொடங்கினால் என்ன செய்வது? ஷஹீது

மர்ஹூம் மனைவி பதிலுரைத்தவாறு, அதிகபட்சமாக **ஷஹீதாக்குவார்களா?** அதை விட நமக்கு நல்லது வேறென்ன இருக்க முடியும்? என்று கூறினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் கலீஃபாக்களைப் பற்றி எவரும் தீய சொற்கள் கூறுவதை இவர் சகிப்பதில்லை.

அடுத்து **டாக்டர் அஸ்கர் யாகூப் கான் சாஹிப் ஷஹீது.** இவர்கள் டாக்டர் முஹம்மது யாகூப் கான் சாஹிபின் மகன் ஆவார். **ஷஹீது** மர்ஹூமின் தந்தையார் 1903 -ல் பட்டாலாவில் பிறந்தார். இவரது தந்தைவழிப்பாட்டனார் சேக் அப்துர் **ரஷீத்** கான் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியாவார். இவர்களது தந்தை மற்றும் தாய்வழி சகோதரராகிய டாக்டர் முஹம்மத் இப்ராஹீம் சாஹிப் இருவரும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய மருத்துவராக பணி செய்யும் வாய்ப்பினை பெற்றிருந்தார். **ஷஹீது** மர்ஹூம் 25 ஆகஸ்ட் 1949 -ல் லாஹூரில் பிறந்தார். F.Sc. க்குப் பிறகு M.Sc., Bio Chemistry படித்து விட்டு M.B.B.S பட்டப்படிப்பும் முடித்தார். **ஷஹீதின்** போது இவரது வயது 60. தாருஸ் ஸிக்ரில் **ஷஹாதத்தின்** பானத்தை அருந்தினார். மஸ்ஜித் மார்டன் டவுண் லாஹூரில் அடக்கம் செய்யப்பட்டார்.

பொதுவாக ஜுமுஆவை கடக் ஹவுஸ் பகுதியில் தொழுவார். அவ்வப்போது பெரிய மஸ்ஜிதுகளுக்கு செல்வார். சம்பவத்தன்று பையனை கல்லூரியில் விடுவதற்காக போயிருந்தார். அருகில் தாருஸ் ஸிக்ரில் ஜுமுஆ தொழச் சென்றார். 1.40 மணிக்கு தான் பள்ளிக்குள் நுழைந்தார். அதே நேரத்தில் கேட்டிற்கு அருகில் தீவிரவாதிகளின் துப்பாக்கி சூடு ஆரம்பமாகி விட்டது. கால்களிலும் குண்டு பட்டது. சிறிது நேரம் நினைவு இருந்தது. பெயர் விவரங்களைக் கூறினார். ஆம்புலன்சில் எடுத்துச் செல்லப்படும் போது வழியிலேயே **ஷஹீதாகி** விட்டார்.

வீட்டினர் கூறுகின்றனர்: மனித இனத்திற்கு சேவை செய்வதில் ஆர்வம் உள்ளவர். ஏழை, பணக்காரன் பாகுபாடு பார்க்கமாட்டார். எல்லாருடனும் அனுதாபத்துடன் நடந்து கொள்வார். நோயாளிகளுக்கு எந்த நேர வரையறையும் வைத்ததில்லை. தேவை உடையவர்கள் எந்த நோக்கத்தில் வந்தாலும் சிகிச்சை அளிப்பார். எப்போதும் ஒவ்வொருவருடனும் அனுதாபத்துடன் நடப்பார். **ஷஹீது** மர்ஹூமுடைய ஓர் உறவினர் சம்பவத்திற்கு ஒரு நாள் முன்பு, எனது தந்தை டாக்டர் வஸீம் சாஹிப் ஒரு கபரைத் தோண்டுகிறார். எனது உறவினர் ஒருவரின் கபர் என்று கூறி அழுகிறார். இவ்வாறு கனவு கண்டுள்ளார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக!

அடுத்து **மியான் முஹம்மது ஸயீத் தர்த் சாஹிப் ஷஹீது.** ஹஸ்ரத் மியான் முஹம்மது யூசுப் சாஹிப் (ரலி) அவர்களின் மகன் ஆவார். இவர்கள் குஜராத்தில் வசித்து வந்தார்கள். பிறகு காதியானுக்கு இடம்பெயர்ந்தார்கள். இவர்களது தந்தை மியான் யூசுப் சாஹிப் (ரலி) அவர்கள் மற்றும் தந்தை வழிப்பாட்டனார் ஹிதாயத்துல்லாஹ் சாஹிப் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபிகள் ஆவர். இவர்கள் 1900 -ல் பைஅத் செய்தார்கள். **ஷஹீது** மர்ஹூமுடைய தந்தையார் நாடு பிரிவினை வரை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய தனிச்செயலராக இருந்தார். அதுவன்றி லாஹூர் மாவட்டத்தில் நாயிப் அமீராக இருந்தார். 1930 -ல் **ஷஹீது** மர்ஹூம் குஜராத்தில் பிறந்தார். இவர் பிறந்த பிறகு வீட்டினர் காதியானுக்கு குடிபெயர்ந்தனர். ஆரம்பக் கல்வியைக் காதியானில் பயின்றார். மவ்லவி ஃபாஸில் முடித்து விட்டு B.A.படித்தார். பிறகு தேசிய வங்கியில் பணியாற்றினார். அங்கிருந்து 1970-ல் மேனேஜராக ஓய்வு பெற்றார். வாழ்வில் ஆறு முறை ஹஜ்ஜும் பலமுறை உம்ராவும் செய்திருந்தார். **ஷஹாதத்தின்** போது இவரது வயது 80. மஸ்ஜித் பைஅத்துந்நூர் மார்டன் டவுணில் **ஷஹாதத்தின்** பானத்தை அருந்தினார். சம்பவத்தன்று சுமார் 1.00 மணிக்கு பள்ளிவாயிலுக்கு சென்று ஜெனரல் நாஸிர் சாஹிப் அருகில் நாற்காலியில் அமர்ந்தார். காலிலும், கையிலும் குண்டுகள் பட்டன. படுகாயமுற்ற நிலையில் மருத்துவமனை எடுத்துச் செல்லப்பட்டார். இரண்டரை மணி நேரம் அறுவை சிகிச்சை நடந்தது. உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. **ஷஹாதத்தின்** பானத்தை அருந்தினார்.

வீட்டினர் கூறுகின்றனர்: அதிகமாக துஆ செய்து கொண்டிருப்பார். எவரையும் புகார் கூறமாட்டார். எப்போதும் பொறுமையையே போதிப்பார். விருந்தோம்பல் குணம் உடையவர். வயதான நிலையிலும் கூட எழுந்து நின்று எல்லாரையும் உபசரிப்பார். குழந்தைகளிடம் அறிவுரை கூறியவாறு உங்கள் உணவு விரிப்பு ஒவ்வொருவருக்காகவும் திறந்திருக்க வேண்டும் என்று கூறுவார். இந்த வயதிலும் எல்லா நோன்புகளையும் வைத்து விடுவார். 1969 – லிருந்து ஒவ்வொரு வருடமும் இஃதிகாஃப் இருப்பார். இரண்டு வருடங்கள் மட்டும் பிள்ளைகளின் பிடிவாதத்தால் இஃதிகாஃப் இருக்கவில்லை. பைத்துந்நர் மார்டன் டவுனில் அடிக்கல் நாட்டும்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடன் சேர்ந்து ஷஹீது மர்ஹூமின் தந்தையாருக்கு செங்கல் எடுத்து வைக்கும் வாய்ப்பு கிடைத்தது. பெரும்பாலும் உட்கார்ந்தவாறு அழுது கொண்டிருப்பார். நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறேன். அவன் எனக்கு எவ்வளவு நிஃமத்துகளை வழங்கி விட்டான் என்று கூறுவதுண்டு. ஷஹாதத்திற்கு சில நாட்களுக்கு முன்பு லாஹூர் மாவட்ட நாயிப் அமீர் இவரை சந்திக்க வந்த போது இது உங்களுடன் எனது கடைசி சந்திப்பு என்று கூறினார். கண் பார்வை இருந்தவரை குழந்தைகளுக்கு குர்ஆன் ஓதிக் கொடுத்தார். கடைசி காலம் வரைக்கும் மக்களிடமிருந்து சந்தா வசூலிப்பதற்காக நடந்து செல்வதன் மூலம் ஓர் அடிக்கு நூறு நன்மை எனக்கு கிடைக்கும் என்று கூறுவார். மஸ்ஜித் பைத்துந்நூருக்கு பெரும்பாலும் நன்மையை பெரும் நோக்கத்தில் நடந்தே செல்வார். ஷஹாதத்திற்குப் பிறகு இவரது மேஜையில் துஆயியா கஸாயின் நூலின் ஒரு பக்கம் திறந்து குப்புற வைத்திருந்தார். வீட்டினர் கூறுகின்றனர்: இதற்கு முன் அவ்வாறு இருந்ததில்லை. திறந்து வைத்திருந்த அப்பக்கத்தில் விடைபெறும் துஆவும் உயரமான இடத்தில் ஏறுவதற்காக துஆவும் இருந்தது. அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக.

அடுத்து **முஹம்மது யஹ்யா கான் சாஹிப் ஷஹீது.** இவர் மலக் அப்துல்லாஹ் சாஹிப் (ரலி) அவர்களின் மகன் ஆவார். மலக் அப்துல்லாஹ் மற்றும் தாதா பரக்கத் அலி சாஹிப் (ரலி) அவர்கள் இருவருமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபிகள் ஆவர். ஷஹீது மர்ஹூமின் சச்சா காதியானின் முன்னாள் நாஸிர் அஃலாவாக இருந்த ஹஸ்ரத் மவ்லானா அப்துர் ரஹ்மான் சாஹிப் ஜட் (ரலி) அவர்கள் ஆவார்கள். ஷஹீது மர்ஹூம் 1933 -ல் காதியானில் பிறந்தார். இவரது வாழ்வு ஒரு அற்புதமாகும். இவரது மூத்த சகோதரருக்கும் இவருக்கும் இடையில் 18 வயது வித்தியாசம் இருந்தது. இடையில் பிறந்த எல்லா குழந்தைகளும் 5-6 வயதாகும் போது மரித்து விட்டன. இவரது ஆரோக்கியம் 5-6 வயதாகும் போது சீர்கேடு அடைந்தது. ஷஹீது மர்ஹூமின் தாயார் குழந்தையை அழைத்துக் கொண்டு அம்மா ஜான் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மனைவி) அவர்களிடம் சென்றார். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் பையனை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். இவரது தாயார் அவர்கள் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் பஞ்சாபி மொழியில், ஹுஸூர் ''இவனும் போய்க்கொண்டிருக்கிறான்'' என்று கூறினார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பையனை மடியில் வைத்து ஷரீஃப் அஹ்மத் என்ற பெயரை மாற்றி முஹம்மது யஹ்யா என்று பெயர் வைத்தார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய துஆவின் அருளால் அக்குழந்தை நீண்ட வாழ்நாளைப் பெற்றது மட்டுமின்றி இப்போது ஷஹீதாகி நிரந்தர வாழ்வைப் பெற்றுவிட்டார். நாடு பிரிவினைக்குப் பிறகு இவர்கள் ஃபைஸ்லாபாத் என்ற ஊருக்கு குடிபெயர்ந்து விட்டார்கள். இதற்கு முன்னால் இவருக்கு காதியானின் மினாரத்துல் மஸீஹில் டியூட்டி இருந்தது. அங்கு நின்று தொலைநோக்கி கருவியின் மூலம் சுற்றுப்புறத்தை கண்காணித்து வர வேண்டும். சிவில் இஞ்சினியரிங்கிற்குப் பிறகு பல்வேறு இடங்களில் பணியாற்றினார். 1981 அல்லது 1982 -ல் பணியின் காரணமாக ஈராக் போயிருந்தார். அங்கு ஜமாஅத் நிறுவும் வாய்ப்பு கிடைத்தது. ஷஹாதத்தின் போது இவரது வயது 77. பைத்துந்நூர் மார்டன் டவுனில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

விபத்தின் போது மஸ்ஜதின் மெயின் ஹாலில் முதல் வரிசையில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். திடீரென்று துப்பாக்கி சூடு ஆரம்பமானது. நீங்கள் பின்னால் போய் விடுங்கள் என்று ஒரு நண்பர் கூற, பதற்றம் ஒன்றுமில்லை. அல்லாஹ் இங்கேயே அருள் செய்வான் என்று கூறினார். பிறகு பொறுப்பாளரின் வழிகாட்டலுக்கேற்ப சுவருக்கு பின்னால் உட்கார்ந்து கொண்டார். அப்போது தீவிரவாதி கிரானைட் குண்டை

வீசினான். அது வெடித்ததில் இவரது தலையின் பின்பகுதி காயமுற்றது. அதே இடத்தில் ஷஹீதாகி விட்டார். இவரது இரு மகன்கள் தாருஸ் ஸிக்ரில் டியூட்டியில் இருந்தார்கள். இரவு 12.00 மணி வரை மீட்புப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு முன்னதாகவே தகப்பனார் ஷஹீதான செய்தியும் கிடைத்திருந்தது.

வீட்டினர் கூறுகின்றனர்: ஷஹீது மர்ஹூம் மிக மிக சகிப்புத்தன்மை கொண்டவர். கோபமுற்று எப்போதும் பார்த்ததில்லை. ஜமாஅத் பணிகளில் மிகவும் ரோஷம் கொண்டவர். குழந்தைகள் ஜமாஅத் பணிகளில் கவனக்குறைவாக இருந்தால் இவரிடமிருந்து மன்னிப்பே கிடைக்காது. நீண்ட காலம் தஃலிமுல் குர்ஆன் செயலராக இருந்தார். வீடுகளுக்குப் போய் மக்களுக்கு குர்ஆனை கற்றுத் தந்தார். மக்கள் அழுதவாறு இவரது ஷஹாதத் செய்தி கேட்டு மருத்துவமனைக்குச் சென்றனர். இவர் செய்த உபகாரத்தை எங்கள் சந்ததிகளால் மறக்கவே முடியாது என்றனர். உறவினர்களுக்கு அவர்களின் துன்ப வேளையில் உதவி செய்துள்ளார். அவருக்கு கிடைத்த பென்சன் தொகை முழுவதையுமே ஏழைகளுக்காக செலவு செய்து வந்தார். ளுஹர், அஸர் இரண்டு தொழுகைகளையும் வீட்டில் ஜமாஅத்துடன் தொழுவார். மற்ற மூன்று தொழுகைகளை பள்ளிவாசலுக்கு சென்று தொழுவார். தஹஜ்ஜுத் தொழுகையை ஒருபோதும் விட்டதில்லை. மருமகனையும் மகனையும் வேறுபடுத்தியதில்லை. மருமகளையும் தனது மகளாகக் கருதினார்.

விபத்திற்கு முன்பு 3 வெள்ளை நிற துணியை தைத்து வைத்திருந்தார். இரு மகன்களும் தமது புத்தாடையை அணிந்து கொண்டனர். ஷஹீது மர்ஹூமிடம் உங்கள் துணியை நீங்கள் அணியுங்கள் என்று கூறிய போது இல்லை. நான் அடுத்த ஜுமுஆவுக்கு அணிவேன் என்றார்.

சில காலம் முன்பு இவரது மகள் கனவில், ஒரு கட்டடத்தில் மக்களுக்கு மெடல் வழங்கப்படுகிறது. அதில் எமது தந்தையும் ஒருவராக இருந்தார். அருகில் ஒருவர் சிறப்பாக பணி செய்தவர்களுக்கு இந்த மெடல் தரப்படுகிறது என்று கூறுகிறார்.

படிப்பதில் நல்ல ஆர்வம் உள்ளவர். ஆயிரக்கணக்கான புத்தகங்களைக் கொண்ட நூலகம் ஒன்று இவருக்கு இருந்தது. இவரது ஒரு மகன் காலித் மஹ்மூத் சாஹிப் வாழ்வை ஜமாஅத்திற்கு அர்ப்பணித்துள்ளார். தஹ்ரீகே ஜதீதின் சிந்து பகுதியின் மானேஜராக இருக்கிறார். அல்லாஹ் ஷஹீது சாஹிபின் தகுதியை உயர்த்துவானாக!

அடுத்து **டாக்டர் உமர் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** டாக்டர் அப்துஷ்ஷுகூர் மியான் சாஹிபுடைய மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் தாதா சவுத்ரி அப்துஸ் ஸத்தார் சாஹிப் 1921-22 ல் பைஅத் செய்தவர். இவரது தாய்வழிப்பாட்டனார் வீடு குர்தாஸ்பூர் பகுதியில் உள்ளது. இவரது தந்தையின் சிற்றன்னையின் கணவர் மவ்லவி முஹம்மத்தீன் சாஹிப் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சதர் ஆக நீண்ட காலமாக இருந்தார். தஃலிமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராகவும் இருந்தார். அதுபோன்று மவலானா ரஹ்மத் அலி சாஹிப் முபல்லிக் இந்தோனேஷியா மற்றும் ராவல்பிண்டி மாவட்ட முன்னாள் அமீர் சவுத்ரி அஹ்மத் ஜான் சாஹிப் இவரது தந்தையின் சின்னம்மாவின் கணவர் ஆவார். முன்ஷி அப்துல் அஸீஸ் சாஹிப் அஜ்லவி (ரலி) அவர்கள் இவரது தந்தையின் தாய்வழிப்பாட்டனார் ஆவார். ஷஹீது மர்ஹூம் ஜுலை 1979 -ல் லாஹூரில் பிறந்தார். M.Sc. Honours Microbiology படித்த பிறகு 17வது கிரேடு Vetenary ஆபீஸராக பணி செய்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 31. வஸிய்யத் அமைப்பில் சேர்ந்திருந்தார். தாருஸ் ஸிக்ர் பள்ளிவாயிலில் கடுமையாக காயமுற்றார். பிறகு ஷஹீதானார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த போது ஷஹீதானார்.

சம்பவத்தன்று பணியிலிருந்து ஜுமுஆவுக்காக தாருஸ் ஸிக்ர் வந்தார். உளூ செய்து கொண்டிருந்த போது துப்பாக்கி சூடு ஆரம்பமானது. Lift அருகில் நின்றார். ஒன்றிரண்டு குண்டுகள் இவரது சிறுநீரகத்தை துளைத்து விட்டு வெளியேறி விட்டன. படுகாயமுற்ற நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். 4 ஆப்பரேசன் செய்யப்பட்டது. ஒரு சீருநீரகம் அகற்றப்பட்டது. 70 பாட்டில் இரத்தம் ஏற்றப்பட்டது. பிழைக்க

வைக்க கடுமையான முயற்சிகள் செய்யப்பட்டது. உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. 4 ஜுன் 2010 -ல் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

வீட்டினர் கூறுகின்றனர்: ஷஹீது மர்ஹூம் குறைவாகவே பேசுவார். பழகுவதற்கு எளிமையானவர். எவரும் இவரைப் பற்றி குறைபட்டதில்லை. தொழுகையைப் பேணக்கூடியவராக இருந்தார். ஒவ்வொரு வியாழக்கிழமையும் தமது ஹல்காவில் நடைபெறும் வகாரே அமல் பணியில் பங்கேற்பார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக!

அடுத்து **லால்கான் சாஹிப் நாஸிர் ஷஹீது.** இவர் ஹாஜி அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூம் சர்கோதா மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தைவழிப் பாட்டனார் குடும்பத்தில் முதலில் பைஅத் செய்தவர். இளம் வயதிலேயே ஷஹீது மர்ஹூமின் தந்தை வஃபாத் ஆகிவிட்டார். தாயாரும் 1995 -ல் வஃபாத் ஆகி விட்டார். ஆரம்பக் கல்விக்குப் பிறகு ரப்வா வந்து விட்டார். B.A. வரை படித்தார். அதற்குப் பிறகு கராச்சிக்கு வேலைக்கு சென்றார். பிறகு தர்பேலாவில் வேலை கிடைத்தது. அதில் 17 வது கிரோடு பட்ஜெட் கணக்கின் ஆபிஸராக இருந்தார். 18வது கிரேடு கிடைக்க இருந்தது. முல்தானில் பணி செய்த போதும் ஜமாஅத் பணிகளை குறைவில்லாமல் செய்து வந்தார். அதுவன்றி முஸஃப்பர் கட் பகுதியின் காயித் ஜில்லா மற்றும் அமீர் ஜில்லாவாக பொறுப்பில் இருந்தார். ஷஹாதத்தின் போது வயது 52. வஸிய்யத்தில் இணைந்திருந்தார். பைத்துந்நூர் மார்டன் டவுனில் ஷஹாதத்தின் பதவியைப் பெற்றார். மஸ்ஜித் பைத்துந்நூரின் இரண்டாவது ஹாலில் அமர்ந்திருந்தார். தீவிரவாதிகள் வந்ததும் ஓடிப்போய் வாசலை மூடினார். ஜமாஅத் சகோதரர்களிடம், சிறிது சிறிதாக ஒரு பக்கமாக எல்லாரும் வந்து விடுங்கள் என்று கூறினார். அப்போது ஒரு தீவிரவாதி துப்பாக்கி முனையை கதவுக்குள் நுழைத்து துப்பாக்கி சூடு செய்தான். அதில் ஒரு குண்டு இவரது மார்பில் பட்டது. அதே இடத்தில் ஷஹீதானார்.

இவரது மனைவி கூறுகிறார்: சம்பவத்திற்கு ஒருநாள் முன்பு ஷஹீது மர்ஹூம் ஒரு கனவு கண்டு பதறி எழுந்து உட்கார்ந்தார். கனவு ஏதாவது கண்டீர்களா? என்று கேட்ட போது அமைதியாக இருந்தார். பின்னர் பிள்ளைகளைப் பார்த்தார். ஆனால் கனவை கூறவில்லை. இவரது மகன் கூறுகிறார்: அடக்கம் செய்த மறுநாள் ஜமாஅத் அல்லாத பையன்களிடமிருந்து வசைமொழிகளால் நிறைந்த SMS வந்து கொண்டிருந்தது. இது அவர்களின் ஒழுக்க நிலை!

மகன் எழுதுகிறார்: நான் ஒரு கனவு கண்டேன். ஒரு கருப்பு திரையில் வெள்ளை எழுத்துக்கள் எழுதப்படுகின்றன. கூடவே என் தந்தையாரின் குரல் வருகிறது. எல்லாவற்றையும் Ignore செய்யுங்கள்; நற்பேறுபெற்ற அம்மக்கள் தியாகம் செய்துள்ளார்கள். ஷஹீதுடைய ஒரு உறவினர் கனவில் இவ்வாறு கண்டார். ஷஹீது ஒரு பசுமையான மைதானத்தில் ஒரு கையில் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூலும் இன்னொரு கையில் ஆப்பிள் பழமும் வைத்துக் கொண்டு உலாவுகிறார்.

ஜுமுஆ நாளில் ஷஹீது மர்ஹூம் தொழுகை சென்டருக்கு போய் தஹஜ்ஜுத் தொழ வைத்தார். அழுதழுது துஆ செய்தார். அதற்கு பிறகு ஃபஜ்ர் தொழுகை நடத்தினார். அதில் கடைசியில் நீண்ட ஸஜ்தா செய்தார்.

வீட்டினர் கூறுகின்றனர்: தற்காலிக அர்ப்பணிப்பில் பெரும் ஆர்வம் உள்ளவர். வக்ஃபே நவ் வகுப்புகளை மகிழ்ச்சியுடன் நடத்துவார். வீட்டில் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் நேரம் ஒதுக்கி அவர்களை ஆய்வு செய்வார். வீட்டில் ஒரு கிறித்தவ சிறுமி பணி செய்து வந்தாள். அவளது கல்விச் செலவுகளை அவரே ஏற்றுக் கொண்டார். திருமணமும் செய்து வைத்தார்.

இவரது மனைவி கூறுகிறார்: அனிஸ் சாஹிப் கூறினார். லால்கான் சாஹிப் தீவிரவாதிகளின் சம்பவம் நடந்த போது தனது ஹல்காவின் அன்சார் சகோதரருடன் சேர்ந்து பள்ளியின் மாடிக்கு போய்விட்டார். தீவிரவாதியின் துப்பாக்கியில் குண்டுகள் முடிந்ததும் ஒருவன் குண்டுகளை அதில் நிறைத்தான். சிறிது நேரம் அமைதியாக இருந்தது. மேலே இருந்தவர்கள் நிலைமை கட்டுக்குள் வந்துவிட்டது என்று தவறாக

கருதிவிட்டனர். உடனே கீழே இறங்கிவிட்டனர். தீவிரவாதி அதற்குள் துப்பாக்கியில் மீண்டும் நிரப்பினான். ஸால்கான் சாஹிப் தனது சகோதரரின் கையுடன் கோர்த்துக்கொண்டு ஓடி ஹாலின் பின்பக்க கதவை மூடிவிட்டு முன்னால் நின்றுகொண்டு தொழுகையாளிகளிடம் நீங்கள் தரூது ஓதுங்கள். விரைவாக பாதுகாப்பான இடத்துக்கு போய் விடுங்கள் என்றார். சுமார் ஒன்றே முக்கால் மணி வரை நலமாகத்தான் இருந்தார். கதவுமூடப்படுவதை தீவிரவாதி பார்த்துவிட்டான். ஓடி வந்து கதவருகில் வந்து கதவை திறக்குமாறு தட்டினான். இவர் உறுதியாக கதவை அடைத்துக்கொண்டு நின்றார். அப்போது தீவிரவாதி துப்பாக்கி முனையை உள்ளே திணித்து சுட்டுவிட்டான். இவரதுகூட இருந்த இருவரும் கூட அதில் மரித்தனர்.

இந்த மூன்று போர்களின் ஷஹாதத்துடன் அந்த ஹால் முழுவதும் காலியாகிவிட்டது. மற்றவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு போய் விட்டனர்.

மனைவி கூறுகிறார்: எனது கணவர் ஒரு மலக்கின் பண்பை கொண்ட மனிதர் எப்போதும் ஜமாத்துக்கு தொண்டு செய்ய வேண்டும் என்று கவலை கொண்டவர். ஜமாத்தில் இருந்து ஒரு அறிவிப்பு வந்தால் உடனே அதனை நடைமுறைப்படுத்திவிடுவார். தமது ஹல்காவின் பஞ்சாப் சொசைட்டியின் ஸயீம் அன்சாருல்லாஹ் புதிதாக பைஅத் செய்தவர்களுக்கு தர்பிய்யத் கொடுக்கும் செயலர், திருமண சம்பந்தங்களின் செக்ரட்டரி, போன்ற பொறுப்புகள் வகித்தார். மிக ஆர்வமாக வக்ஃபே ஆர்ஸி செய்வார்.

ஷஹாதத்தின் 15 நாள் முன்பு இவரது வக்ஃபே ஆர்ஸி (தற்காலிகமாக அர்பணித்து சேவை செய்தல்) முடிந்திருந்தது. வக்ஃபே ஆர்ஸிக்காக அஸரில் இருந்து இஷாவரை உள்ள நேரத்தை தந்திருந்தார். அசர்-மக்ரிப் வேளையில் வாப்டா டவுணில் உள்ள குழந்தைகளுக்கு வக்ஃபே நவ் திட்டம் என்ற நூலில் இருந்து குழந்தைகளுக்கு தொழுகையை பொருளுடன் சொல்லிக்கொடுப்பார். குர்ஆன் ஓத சொல்லித் தருவார். வக்ஃபே நவ் குழந்தைகளிடம் சூராக்க் ஓதிக்கேட்பார். குழந்தைகளை சரியான முறை உச்சரிக்க சொல்லித் தருவார். மக்ரிப் தொழுகைக்கு பிறகு நஸ்பாக் சொசைட்டி பகுதியில் இஷா வரை அங்குள்ள குழந்தைகளுக்கு சொல்லித்தருவார். காலத்தின் கலீஃபாவுக்கு கீழ்ப்படிதல் ஆர்வம், ஜமாத்துக்கு கட்டுப்படுதல், ஆகியவற்றை குழந்தைகளுக்கு போதிப்பார். ஜமாத்தின்மீது ஆர்வம் ஏற்படுத்தும் சம்பவங்களை கூறுவார். எனது கணவர் இறந்தபிறகு எல்லா குழந்தைகளும் சோகமாகி விட்டனர். இந்த Uncle எங்களது Favourite Uncle ஆவார். எங்களுக்கு நிறைய விஷயங்களை கற்றுத்தந்துள்ளார் என்று கூறினார். எப்போதும் நாவில் தரூது வந்து கொண்டே இருக்கும். கிலாஃபத் ஜுப்ளி துஆவும் ஓதிக் கொண்டிருப்பார். வீட்டினரையும் இதனை செய்யுமாறு கூறிவந்தார். தொழுகையில் ஆரம்ப வேளையில் தொழுதுவிடும் வழக்கம் உள்ளவர். வீட்டினரையும் அதற்கு பழக்கமாக்கினார்.

முரப்பி சாஹிப் (கொள்கைபரப்புனர்) இவரைப்பற்றி ஒரு சம்பவம் எழுதுகிறார். 1998ல் இருந்து 2001 வரை முஸஃபர் கட்டின் மாவட்ட அமீராக இருந்தார். ஜமாஅத்தின் தர்பிய்யத் பற்றிய பெரும் கவலையிருந்தது. வீட்டில் இருந்து அப்பணியை தொடங்கினார். குடும்பப் பிரச்சனைகளில் சமாதானம் செய்துவைக்க முயல்வார்.

ஸஹர் சுல்தான் என்ற ஊரில் ஒரு குடும்ப பிரச்சனை- இருதரப்பாரின் வாதத்தையும் கேட்டார். இரு குடும்பத்தினருக்கும் தனது கருத்தை எடுத்து வைக்கும் போது அவரது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. மீண்டும் மீண்டும் அறிவுரை கூறினார். நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) உடைய ஜமாத்தை சார்ந்தவர்கள். சிந்தியுங்கள். உங்கள் சச்சரவுகளை விட்டுவிட்டு ஒன்று சேர முயலுங்கள். கோபத்தை விட்டுவிடுங்கள் என்று கூறி சமாதானம் செய்து வைத்தார். எளிமையும், தாழ்மை குணமும் எல்லையற்றதாக இருந்தது. எந்த பிரச்சனை வந்தாலும் மஜ்லிஸ் ஆமிலாவின் முன் வைப்பார். கருத்தை கேட்பார். குறைகளை மறைக்கும் பண்பு கொண்டவர். ஏதாவது பிரச்சனை ஏனில் துஆ செய்வார். மேலிடத்திற்கு தெரியப்படுத்துவார். சம்பந்தப்பட்டவர்கள் சீர்படுவதை பார்த்தால் அதனையும் மேலிடத்துக்கு எழுதுவார். இவர் மாவட்ட அமீராக இருந்தவரை ஜமாத்துக்கு ஒரு பொறுப்புள்ள தந்தையின் ஸ்தானத்தில் பணி செய்தார். அல்லாஹ் இவரது தகுதியை உணர்த்துவானாக.

அடுத்து **முகர்ரம் ஸஃபர் இக்பால் சாஹிப் ஷஹீது.** முஹம்மத் சாதிக் சாஹிபின் மகன் ஆவார். **ஷ**ஹீது மர்ஹூம் ஆரிஃப்வால் மாவட்டத்தை சார்ந்தவர். ஆரம்ப கல்வியை அங்கேயே கற்றார். பிறகு லாஹூருக்கு குடிபெயர்ந்தார். லாஹூரில் படித்தார். பிறகு சவூதி அரபியே போய்விட்டார். அங்கு இருக்கும் போது 5முறை ஹஜ் செய்யும் வாய்ப்பு பெற்றார். அங்கிருந்து பாகிஸ்தான் திரும்பியதும் போக்குவரத்து துறையை தேர்ந்தெடுத்தார். ஒரு வருடம் முன்பு இவர் குடும்பத்துடன் ஜமாஅத்தில் சேர்ந்தார். **ஷ**ஹாதத்தின் போது இவரது வயது 59. தாருஸ்ஸிக்ரில் **ஷ**ஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

**ஷ**ஹீது மர்ஹூம் சாஹிப் தொடர்ந்து தஹஜ்ஜுத் தொழுகைக்கு எழுந்து விடுவார். ஃபஜ்ர் தொழுத பிறகு 7.00 மணிக்கு பணிக்காக வீட்டிலிருந்து வெளியேறி விடுவார். 28 மே ஆகிய சம்பவ நாளில் தஹஜ்ஜுத் தொழுதுவிட்டு குர்ஆன் ஓதினார். பிறகு ஃபஜ்ர் தொழுதுவிட்டு காலை உணவு உண்டு விட்டு பணிக்காக வீட்டை விட்டு வெளியே போய்விட்டார். வேலை முடித்து மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரை வந்தடைந்தார். சம்பத்தன்று தொடர்ந்து மகனுடன் போனில் பேசிக்கொண்டிருந்தார். நாங்கள் மறைந்து இருக்கிறோம் என்று சொன்னார். எங்கே மறைந்திருக்கிறோம் என்று சொல்லவில்லை. துப்பாக்கி சூடு அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. துஆ செய்யுங்கள். அல்லாஹ்வே நமக்கு உதவி செய்வான் என்றார். பிறகு மகளிடம் போனில் பேசினார். துஆ செய்யுங்கள் என்றார். பிறகு மீண்டும் மீண்டும் போன் செய்ய வேண்டாம் என்று கூறிவிட்டார். தீவிரவாதிகளின் துப்பாக்கி சூட்டின் போது ஒருகுண்டு அவரது தோளில் பட்டது. அவரது உடல் மெயின் கேட்டிற்கு அருகில் கிடந்தது. துப்பாக்கிசூடு முழுமையடைவதற்கு முன் ஒரு தவறான செய்தியால் வந்ததில் மினாரில் மறைந்திருந்த தீவிரவாதிகளின் துப்பாக்கி சூட்டில் இவரது தோளில் குண்டடிப்பட்டது. அது இதயத்தின் பக்கம் சென்று விட்டது. அதன்பிறகு ஆம்புலன்ஸில் எடுத்துச் செல்லப்பட்டார். முடிந்தவரை உயிரை காப்பாற்ற முயற்சி செய்யப்பட்டது; முடியவில்லை. **ஷ**ஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

இவரது மனைவி கூறுகிறார்: எனது உணர்வுகளை வார்த்தைகளால் எடுத்து வைக்க என்னால் இயலாது. எனது ஈமான் இதன்மூலம் மேலும் வலுவடைந்து விட்டது. அல்லாஹ் மனிதனின் நிய்யத்தை நன்கறிகின்றான். அவன் தனது அடியார்களுக்காக செய்வதை அடியான் தனது சிந்தனையால்கூட தொட்டுப் பார்த்திருக்க முடியாது. இறைவன் எனது கணவருக்கு **ஷ**ஹாதத்தின் பதவியை தந்தான்.

**ஷ**ஹீது என்ற பதவியை அவருக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான் எனில் அதற்கு என் கணவர் மிகவும் தகுதியுள்ளவர். இதனை நான் பெருமையாகவே கூறுகிறேன். எனது எல்லா குழந்தைகளும் ஜமாத்துக்காக தமது உயிரை தியாகம் செய்துவிட்டாலும் சிறிதும் கூட எனது உறுதியில் ஓர் அசைவும் ஏற்படாது. மாறாக நான் எனது இறைவனுக்கு அளவற்ற நன்றியையே செலுத்துவேன்.

**ஷ**ஹீது மர்ஹூமின் மகன் கூறுகிறார்: எனது தந்தையின் **ஷ**ஹாதத்திற்கு சிலநாள் முன்பு எனது மாமா தாஹிர் மஹ்மூது சாஹிப் ஒரு கனவு கண்டார். ஃபஜ்ர் தொழுகைக்காக எழுந்தபோது எனக்கு கனவு நினைவில்லை. ஆனால் ஒரே ஒரு வாக்கியம் மட்டும் தான் நினைவில் இருக்கிறது. மலைக்குப் பின்னால் விட்டு விட்டோம் என்பது தான் அந்த வாக்கியமாகும் என்றார். நாங்கள் எங்கள் தந்தையை நிரந்தரமாக ரப்வாவின் மலை அடிவாரத்தில் விட்டுவிட்டு வந்தபோது மலை அடிவாரத்தில் உள்ள அப்பகுதியை பார்த்ததும் எனது மாமா தாம் கண்ட அக்கனவை கூறினார். முதன்முறையாக **ஷ**ஹீது ரப்வா சென்றுள்ளார். பிறகு நிரந்தரமாக அங்கேயே (கபரில்) தங்குபவராகிவிட்டார்.

மகன் மேலும் கூறுகிறார். தந்தை ஆரம்பத்தில் ஜமாஅத்துக்கு கடும் எதிரியாக இருந்தார். பிறகு உண்மையான உள்ளத்துடன் அஹ்மதிய்யத்தை ஒப்புக்கொள்ளும் வாய்ப்பை அல்லாஹ் அவருக்கு வழங்கினான். தூய்மை, தக்வா, ஈமான் ஆகியவற்றில் பன்மடங்கு உயர்ந்தார். பைஅத் செய்த ஒரு வருடத்திலேயே **ஷ**ஹாதத் போன்ற பெரும் பதவியை பெறுமளவுக்கு அல்லாஹ் அவருக்கு அருள்புரிந்தான். ஒரு வருடத்திலேயே ஜமாஅத்தின் மீது நல்ல பற்று உள்ளவராக திகழ்ந்தார். டிஸ் ஆன்டென்னா பொருத்தி M.T.A. விரும்பி பார்ப்பார்.

இவர் எப்படி பைஅத் செய்தார்? மர்ஹூம் M.T.A. சம்பந்தமான பல விஷயங்களைப் பற்றி பல ருசிகர சம்பவங்கள் உள்ளன. அது பற்றி விபரங்கள் அதற்குப்பின் வருகின்றன. இவரை சந்தித்த ஒருவரின் கடிதம் வந்துள்ளது.

லாஹூர் விபத்தின்போது அல்லாஹ் ஒரு மனிதனுக்கு ஷஹாதத்தின் பதவியை வழங்கியுள்ளான். அவரோ ஒரு வருடம் முன்புதான் பைஅத் செய்தவர். இந்த சிறுகாலத்திற்குள் கிலாஃபத்தின்மீது எவ்வளவு அன்பு என்றால் M.T.A.-வில் எனது (ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்) நிகழ்ச்சிகள் ஒளிபரப்பானால் எனது முகத்தை Zoom செய்து திரையில் பார்ப்பார். ஜமாஅத்தின் மீது நல்ல பற்று உள்ளவர். எப்போதும் தாருஸ் ஸிக்ரில்தான் ஜுமுஆ தொழுவார். அருகில் ஒரு பள்ளியும் இருந்தது. இருந்தும்கூட அங்கு (தாருஸ் ஸிக்ருக்கு) தான் செல்வேன் என்பார். சில நாட்களுக்கு முன் ஒரு போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசும் பெற்றார். பரிசாக அவருக்கு ஒரு முஸல்லா கிடைத்தது. எனவே மிகவும் மகிழ்ச்சியடைந்தார். இன்னொரு கடிதத்தில் இவரது மனைவியின் சகோதரர் கூறுகிறார்:

ஷஹீது மர்ஹூம் எளிமையானவர். எனது மச்சானுடைய எல்லா விஷயங்களையும் எனது சகோதரி அவரது மரணத்திற்கு பிறகு கூறினார். எனது மச்சான் குடும்பத்தின் முதல் அஹ்மதி உறவினர்களின் தரப்பிலிருந்து இவருக்கு எதிர்ப்பு இருந்தது. மிகவும் சிரித்த முகம். மற்றவர்களின் உணர்வுகளை மதிப்பவர். பிறரது சுக, துக்கங்களில் பங்குபெறுவதில் முன்னணியில் நிற்பார்.

இவரது மனைவி கூறுகிறார்: மார்ச் 2009 -ல்தான் பைஅத் செய்தார். நான் பிறப்பால் அஹ்மதியாவேன். எனது பிள்ளைகளும் கணவரும் ஒன்றாக பைஅத் செய்தனர். எனது திருமணத்திற்கு பிறகு பெரும் எதிர்ப்பு எழுந்தது. அனைத்துமே எனது மாமானார் வீட்டு உறவினர்களின் எதிர்ப்புதான். ஸப்ர் சாஹிபின் நல்லொழுக்கம், நல்லியல்பு மிக்கவர். 10 வருடம் சவூதி அரேபியாவில் இருந்தார். 5 முறை ஹஜ்ஜும் எண்ணற்ற உம்ராக்களும் செய்தவர். 1986 -ல் மீண்டும் பாகிஸ்தான் வந்தார். அஹ்மதிய்யத்தை ஏற்கும் முன்பு கூட ஒரு கணவர் என்ற முறையில், ஒரு தந்தை என்ற முறையில் மிகவும் அன்பு காட்டுபவராக இருந்தார். தமது பிள்ளைகளைத் தவிர பிற பிள்ளைகளின் மீதும் நல்ல அன்பு காட்டுபவர். அஹ்மதிய்யத்துக்கு வந்த பின்பு முன்னரை விட அதிகமாக தொழுகையில் பேணுதலுடன் காணப்பட்டார். தஹஜ்ஜுத்திலும் கவனம் செலுத்தினார். நூல்களைப் படிப்பதில் பெரும் ஆர்வம் இல்லை. ஆனால் பைஅத் செய்த பிறகு தூங்குவதற்கு முன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) உடைய புத்தகத்தை படித்துக் காட்டுமாறு என்னிடம் கூறுவார். அல்லது தானே படித்துவிட்டு தூங்குவார். ஒரு மாதம் முன்பு வீட்டினர் எல்லாருமே கவனித்த ஒரு விஷயம். அஹ்மதியத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டார். அன்சாருல்லாஹ் கூட்டத்திற்கு கண்டிப்பாக கலந்து கொள்பவராகி விட்டார். முன்வரிசையில் அமர்ந்திருப்பார்.

மகன் கூறுகிறார்: அவர் போன்செய்த போது நான் போனை எடுக்கவில்லை. பணியில் மூழ்கியிருந்தேன். பள்ளியில் பிரச்சனை எழுந்துள்ளது என்று எனக்கு பிறகு தான் தெரிய வந்தது. பிறகு நான் போன் செய்தேன். அப்போது இங்கு துப்பாக்கி சூடு நடக்கிறது. எமக்காக துஆ செய்யுங்கள் என்றார். தந்தையே உங்கள் மீது கவனம் என்று நான் கூறினேன். சிரித்தவாறு என்ன கவனம் வைப்பது? அல்லாஹ்தான் கவனிக்கவேண்டும் நீ துஆ மட்டும் செய் என்றார்.

இவர் பைஅத் செய்யும் முன்பே இவரது மனைவி அஹ்மதியாக இருந்தார். மகன் கூறுகிறார்: எனது அம்மா ஜமாத் புத்தகத்தை படிப்பதை கண்டால் எனது தந்தைக்கு கடும் கோபம் வந்துவிடும். இதனை மனைவி கூறியதில்லை. பிள்ளைகளே பார்த்துள்ளனர். என் அப்பா அம்மாவிடம் மிகவும் கண்டிப்பாக இங்கு ஜமாஅத் புத்தகங்கள் எதுவும் என் கண்ணில்படக் கூடாது, என்று கூறிவிட்டார். பிறகு ஒரு முறை முல்தானில் உள்ள அஹ்மதி உறவினர் வீட்டுக்கு சென்றபோது அங்கு குல்ஷனே வக்ஃபே நவ் என்ற நிகழ்ச்சி M.T.A.-ல் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. மறுநாள் நேற்று பார்த்த நிகழ்ச்சி தினமும் ஒளிபரப்பாகுமா? என்று கேட்டார். அவ்வீட்டினர் கூறினர் தினமும் வரும். அப்படியானால் திரும்ப ஒருமுறை அதனை காட்டுங்கள் பார்ப்போம் என்று என் அப்பா கூறினார்.

சிலகாலம் பிறகு அம்மா கூறியதற்கிணங்க தானே போய் டிஷ் வாங்கிவந்து இணைப்பு கொடுத்து M.T.A. பார்க்க ஏற்பாடு செய்தார். குத்பாக்களை கவனமாக கேட்பார். பிறகு என் அப்பா மார்ச் 2009ல் பைஅத் செய்துவிட்டார். இது மகனது கூற்று. மகன் மேலும் எழுதுகிறார். எனது அன்புக்குரிய தந்தை ஷஹீதாகி விட்டார். அவர் கொடுத்த ஒரு சந்தாவின் ரசீதை முரப்பிசாஹிப் ஷஹாதத்திற்கு பிறகு என்னிடம் கொடுத்தார். அப்பா ஷஹீதான பிறகு எமது முஹல்லாவில் எதிர்ப்பு கூடியது. ஃபத்வாக்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டினர். பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றனர். அல்லாஹ் எல்லோரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக.

அடுத்து **முகர்ரம் மன்சூர் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் அப்துல் ஹமீது ஜாவிது சாஹிபின் மகன். ஷஹீது மர்ஹூம் குடும்பம் ஏற்கனவே ஷாத்ரா லாஹூர் பகுதியை சார்ந்தது. இவரது கொள்ளுத்தாத்தா குலாம் அஹ்மது மாஸ்டர். இவர் அனேகமாக முதல் கலீஃபத்துல் மஸீஹ் உடைய கிலாஃபத்தில் பைஅத் செய்திருப்பார். 1953ல் இவரது வீட்டிற்கு நெருப்பு மூட்டப்பட்டது. அதன்பிறகு ரப்வா போய்விட்டார். பிறகு தந்தையார் 1970வாக்கில் கராச்சி போய்விட்டார். 1974ல் இவரது தந்தையாரின் கடைக்கு நெருப்பு வைக்கப்பட்டது. பிறகு அவர் லாஹூருக்கு குடிபெயர்ந்து விட்டார். ஷஹீது மர்ஹூம் ஏற்றுமதி, இறக்குமதி கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். வெளிநாடு போக முயன்று வந்தார். இவரது சகோதரர் ஒருவர் மான்செஸ்டரில் இருக்கிறார். நான் ரப்வாவுக்கு இடம் பெயர்ந்து செல்ல வேண்டும் என்று சில நாட்களாக கூறி வந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 36. அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் அமைப்பில் இணைந்துள்ளார். மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

ஷஹீது மர்ஹூமின் அலுவலகத்தைச் சார்ந்தவர்கள் இவரை மிகவும் புகழ்கின்றனர். அவர்கள் கூறுகின்றனர். ஷஹீது மர்ஹூமுடன் இன்னொரு அஹ்மதியும் இங்கு வேலை செய்தார். அவரை அழைத்துக் கொண்டு ஒவ்வொரு ஜுமுஆவுக்கும் போய்விடுவார். சம்பவ நாளன்று கூறினார்: ஒவ்வொரு நாளும் நீங்கள் என்னை தாமதம் ஆக்குகின்றீர்கள். இன்றைக்கு எந்த சூழ்நிலையிலும் தாமதம் ஆகக் கூடாது என்று கூறினார்.

இவ்வாறு சம்பவம் நிகழ்ந்த நாளன்று விவாதம் செய்து அந்த அஹ்மதியுடன் சண்டை போட்டு ஜுமுஆவுக்கு கூட்டிச் சென்றார். மஸ்ஜிது சென்றடைந்து முதல் ஸஃப்பில் சுன்னத் தொழுதார். தாக்குதல் தொடங்கியதும் தமது அலுவலகத்துக்கு போன் செய்து, நான் மிகவும் படுகாயமுற்றுள்ளேன். இரத்தம் கணிசமாக வெளியேறுகிறது. என்னை காப்பாற்ற முயலுங்கள் என்றார். வீட்டிலிருந்து தாயார் போன் செய்த போதும், எங்களை இங்கிருந்து வெளியேற்றுவதற்காக யாரையாவது அனுப்புங்கள் என்றார். மனைவியுடன் பேசிக்கொண்டிருந்த போது குண்டுகள் பாயும் சப்தம் கேட்டதாக கூறுகிறார். அதன் பிறகு சப்தம் நின்று விட்டது. ஷஹீது மர்ஹூமுடைய மனைவி கூறுகிறார்: மிகவும் நகைச்சுவை உணர்வு உள்ளவர். ஷஹாதத்திற்கு ஒரு வாரம் முன்பு என்னிடம், குழந்தைகளை கவனித்துக் கொள். குழந்தைகளின் பொறுப்பை நீதான் நல்ல முறையில் நிறைவேற்ற முடியும். நான் குழந்தைகளுக்காக அதிக நேரம் ஒதுக்க முடியாமல் போகலாம். குழந்தைகளை அதிகமாக உன்னிடம் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தி விடு. என்னைப் பற்றிய நினைவு வரக்கூடாது என்று கூறினார். சம்பவ நாளன்று வெள்ளிக்கிழமை காலையில் கூறினார். பையன் ஷாஹ் சேட் முஹ்ஸின் நன்றாக இருக்கிறான். மூன்று வயதாகி விட்டால் இவனை ரப்வாவுக்கு அனுப்பி விட வேண்டும். ஜமாஅத்திடம் இவனை ஒப்படைத்து விட வேண்டும். அவர்கள் இவனை எப்படி எந்த துறையில் விரும்புகிறார்களோ ஆக்கிக் கொள்ளட்டும் என்றார். சில காலம் முன்பு இவரது பக்கத்து வீட்டுக் காரருக்கு ஓர் விபத்தினால் மோட்டார் சைக்கிள் ஓட்ட முடியாமல் இருந்தார். அவரை ஷஹீது மர்ஹூம் நீண்ட காலமாக அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்து வந்தார். அவ்வீட்டினர் ஷஹீது மர்ஹூமுக்கு நன்றி தெரிவித்த போது, எனது மூச்சு இருக்கும் வரை இதனை செய்வேன். நன்றியெல்லாம் வேண்டாம் என்று கூறினார். மன்சூர் அஹ்மத் சாஹிப் ஷஹீது மிகவும் எளிமையானவர்; களங்கமற்றவர்; கிலாஃபத்துடன் விசுவாசம் கொண்டவர்.

முரப்பி சாஹிப் இவரைப் பற்றி எழுதுகிறார்: இவர் தனது குழந்தைகளை வக்ஃபே நவ் வகுப்பில் முறைப்படி அனுப்பி வைப்பார். குழந்தைகளை கிலாஃபத்துடன் விசுவாசம் கொள்கைப்பிடிப்புடன் வளர்த்தார். பெரும் நீண்ட நஸ்ம்களைக் கூட மனப்பாடம் செய்திருந்தார். மூத்த மகளுக்கு ஐந்து வயதாகிறது. நல்ல நஸ்ம் படிப்பாள். ஒரு முறை நான் வகுப்பு எடுத்த போது முகர்ரம் மன்சூர் அஹ்மத் சாஹிப் ஷஹீதிடம், சின்னச் சின்ன குழந்தைகளுக்கு இவ்வளவு நீண்ட நஸ்ம்களையெல்லாம் எப்படி மனனம் செய்ய வைத்தீர்கள் என்று கேட்ட போது இந்த நஸ்ம்களை எனது செல்ஃபோனில் பதிவு செய்து வைத்துள்ளேன். குழந்தைகள் எப்போதும் அதனை கேட்டுக் கொண்டிருப்பர். குழந்தைகள் விரைவாக படிக்க வேண்டும் என்று நான் விரும்பினேன் என்றார்.

செல்ஃபோனில் பல்வேறு இசைகளை பதிவு செய்பவர்களுக்கு இவரிடம் ஒரு பாடம் உள்ளது.

அடுத்து **முபாரக் அலி அவான் சாஹிப் ஷஹீது.** இவர் அப்துர் ரஸ்ஸாக் சாஹிபின் மகன் ஆவார். ஷஹீது மர்ஹூம் குஸுர் பகுதியைச் சார்ந்தவர். இவரது தந்தை வழிப்பாட்டனார் நிஸாமுத்தீன் சாஹிப் மற்றும் இவரது கொள்ளுத்தாத்தா இருவரும் குடும்பத்தின் கடும் எதிர்ப்புக்கிடையிலும் பைஅத் செய்தார்கள். மர்ஹூமின் தாய்வழிப்பாட்டனார் முஹம்மத் இஸ்ஹாக் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார்கள். ஷஹீது மர்ஹூம் B.A., B.Ed படித்த பிறகு லாஹூரில் கல்வித் துறையில் பணியாற்றினார். ஷஹாதத்தின் போது இவரது வயது 59. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். தினமும் பணிக்காக குஸுர் பகுதியிலிருந்து லாஹூருக்கு பேருந்தில் வருவார். தொழுகையை தாருஸ் ஸிக்ரில் தொழுதார். சம்பவ நாளில் மெயின் ஹாலில் இருந்தார். தீவிரவாதிகள் தாக்குதல் தொடுத்த போது அமீர் சாஹிபுக்கு போன் செய்து, தாருஸ் ஸிக்ர் மஸ்ஜதில் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுக்கின்றனர் என்றார். சிறிது நேரம் கழித்து எனக்கு குண்டடிபட்டுள்ளது. நான் காயமுற்றுள்ளேன் என்றார். பிறகு 3-15 மணிக்கு தனது மகனிடமும் போனில் பேசினார். நடந்த சம்பவங்களை தெரிவித்து துஆ செய்யுமாறு கூறினார். அதன் பிறகு இன்னொரு நண்பர் தொடர்பு கொள்ள முயன்ற போது அல்லாஹ் அல்லாஹ் என்ற குரல் மட்டும் வந்தது. இரத்தம் அதிகமாக வெளியேறியதாலும் படுகாயமுற்றதாலும் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

ஷஹீது மர்ஹூம் முன்மாதிரியாகத் திகழ்பவர். நல்லொழுக்கம் மிகுந்தவராக இருந்ததால் ஜமாஅத்தை வெளிப்படையாக எதிர்க்க எவருக்கும் தைரியம் இருந்ததில்லை. ஜமாஅத்தின் மீது நல்ல பற்றுள்ளவர்; விருந்தோம்பல் செய்பவர்; ஏழைகளுக்கு உதவுபவர். இவரது ஜனாஸா எடுக்கப்பட்ட போது ஒரு அஹ்மதியல்லாத பெண் அழுதவாறு வந்து, அய்யோ! இவருக்குப் பிறகு எனக்கும், எனது வயதான கணவருக்கும் உதவி செய்பவர் யார்? என்று புலம்பி அழுதார்.

தொழுகை மையத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார். தஹஜ்ஜுத்தும் மற்ற தொழுகைகளையும் பேணுபவர். ஜமாஅத் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வார். குஸுர் பகுதியின் முரப்பி சாஹிப் கூறுகிறார்: சம்பவத்தன்று பள்ளி விடுமுறை ஆரம்பமாகி இருந்தது. அவர் நினைத்திருந்தால் குஸுருக்கு வந்து நிம்மதியாக ஜுமுஆ தொழுதிருக்கலாம். ஆனால் எனது கடைசி ஜுமுஆ தாருஸ் ஸிக்ரில்தான் தொழுவேன். அதன் பிறகு விடுமுறைஆரம்பமாகி விடும் என்று கூறி வந்தார்.

ஷஹீது மர்ஹூம் சில நாட்கள் முன்பு கனவில், தான் மிகவும் நல்ல இடத்திற்கு செல்வதாகக் கண்டார். நகைச்சுவையாக சொர்க்கத்திற்கு தான் போவேன் போலும்! அதையே உள்ளம் நாடுகிறது என்றார். வருடத்தில் இருமுறை ஏழைகளுக்கு உணவு சமைத்து வழங்குவார்.

முரப்பி சாஹிப் கூறுகிறார்: கஸுர் பகுதியில் நான்கு வருடங்கள் எனக்கு முரப்பியாக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. முகர்ரம் முபாரக் அலி ஆவான் சாஹிப் ஷஹீது அவர்கள் அஹ்மதிய்யத் மீது ரோஷம் கொண்டவர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீதோ அல்லது ஜமாஅத்தின் மீதோ எந்த ஆட்சேபனை செய்யப்பட்டாலும் நல்ல முறையில் பதிலளிப்பார். இவர் ஆசிரியராக பணியாற்றியவர். எனவே உடன் பணியாற்றியவர்களுடன் ஜமாஅத் சம்பந்தமான விவாதம் நடைபெறும். ஏதாவது புதிய ஆட்சேபனை

செய்யப்பட்டாலும், கேள்வி கேட்ட அவர்களுக்கு போதுமான பதில் கொடுக்காமல் விட மாட்டார். நல்ல முறையில் பதில் சொல்லி முடித்த பிறகு இவரது முகத்தில் ஓர் அசாதாரண நிம்மதி தோன்றும். கடலில் நீச்சலடித்து விட்டு கரையேறியதைப் போன்ற ஒரு நிம்மதி அவரிடம் காணப்படும். அதுபோன்று ஜமாஅத்தைச் சேர்ந்த உறவினர்களைப் பற்றி அதிகமான அனுதாபம் உள்ளவர். தவறு அடுத்தவரிடம் இருந்தால் கூட தானே சென்று மன்னிப்பு கேட்பார். அவரிடம் முன்பை விட அதிகமாக அனுதாபம் காட்டுவார்.

அடுத்து **அதிகுர்ரஹ்மான் சாஹிப் ஸஃபர் ஷஹீது.** இவர் முஹம்மத் ஷஃபி சாஹிபுடை மகன் ஆவார். ஷஹீது மர்ஹூம் ஸியால்கோட் பகுதியைச் சார்ந்தவர். 1998 –லிருந்து சேக்பூரா மாவட்டத்தில் தங்கியிருந்தார். 1988 –ல் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தவர். அதற்கு பிறகு ஒரு வருடம் கழித்து இவரது மனைவி பைஅத் செய்தார். சொந்த தொழில் செய்து வந்தார். சில காலம் துபையில் இருந்தார். 2009 –ன் ஆரம்பத்தில் பாகிஸ்தான் திரும்பி வந்தார். கடந்த ஆறு மாதம் வரை லாஹூர் மாவட்ட அமீரின் டிரைவராக வேலை பார்த்து வந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 55. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரின் மெயின் ஹாலில் அமர்ந்திருந்தார். இவரது அருகில் கிரானைட் வெடித்தது. வீட்டிருனருக்கு போன் செய்து தாக்குதல் நடப்பதை தெரிவித்தார். அதே வேளையில் குண்டு பட்டது. அதில் போன் கீழே விழுந்தது. அடுத்து பேச முடியவில்லை. அத்துடன் ஷஹாதத்தும் நடந்து முடிந்து விட்டது. ஷஹீது மர்ஹூமுடைய அஹ்மதி அல்லாத சகோதரர்கள் இவரை மூதாதையரின் ஊரில் அடக்கம் செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள. ஷஹீது மர்ஹூம் அஹ்மதி ஆவார். எனவே ரப்வாவில் குடிபெயரும் விருப்பம் இருந்தது. எனவே ரப்வாவில் தான் அவரை அடக்கம் செய்ய வேண்டும் என்று மனைவி கூறி விட்டார். உடனே சகோதரர்களும் ஏற்றுக் கொண்டனர். உடனே ரப்வாவில் கொண்டு அடக்கப்பட்டார். ஷஹீது மர்ஹூம் பைஅத் செய்யும் முன்பு மகள் ஒரு கனவு கண்டார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் (ரஹி) அவர்கள் இவர்களது வீட்டிற்கு வந்துள்ளார்கள். ரோஜா செடிகளை நடுகின்றார்கள். நானும் எனது தந்தையும் அதனை மிகவும் பாதுகாக்கின்றோம். அதற்கு தண்ணீர் ஊற்றுகிறோம். இது கனவாகும். சில காலத்திற்கு பிறகு அக்குடும்பம் அஹ்மதிய்யத்தை ஏற்று விட்டனர். பைஅத் செய்த பிறகு இவரது பெற்றோர் இவரை வீட்டை விட்டு வெளியேற்றினர். மற்ற உறவினர்கள் மற்றும் முஹல்லாவாசிகள் கூட இவரைத் திட்டினர். கல்லால் அடித்தனர். கடைசியில் இவர் ஒரு அஹ்மதி வீட்டில் தஞ்சம் புகுந்தார்.

அல்லாஹ் கனவின் மூலம் குடும்பத்தினருக்கும் கூட ஆறுதல் அளிக்கின்றான்.

இவரது மகள கூறுகிறார்: ஒரு நாள் முன்பு கனவு கண்டேன். வீட்டிற்கு வெளியிலும் வீட்டிலும் ஒரே கூட்டம். இரண்டாவது மகள் மர்யம் கனவு கண்டார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் வந்துள்ளார்கள். எங்களது தலையில் கை வைத்து அன்பு காட்டுகின்றனர். இவ்வாறு கனவில் கண்டார்.

மூன்றாவது மகளும் ஒரு கனவு கண்டுள்ளார். ஒரு காடு இருக்கிறது. அதில் பெரும் எருமைகளும் விலங்குகளும் உள்ளன. நான் பயந்து ஓடுகிறேன். திடீரென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தென்படுகிறார்கள். பயந்து போய் ஹுஸுர் (அலை) அவர்களைக் கட்டிப் பிடித்துக் கொள்கிறேன். வீட்டினர் கூறுகின்றனர்: ஷஹீது மர்ஹூம் போதும் உளுவுடன் இருப்பார். எப்போதும் தரூது ஓதிக் கொண்டிருப்பார். நல்ல உழைப்பாளி. தஹஜ்ஜுத் தொழுபவர். டியூட்டிக்கு போய் விட்டால் இரவு தான் வீட்டிற்கு திரும்புவார். உங்களுக்கு சோர்வு வராதா என்று கேட்டால் நான் எப்போதும் தரூது ஓதி வருகிறேன். எனக்கு சோர்வே வராது. தப்லீகிற்கு வாய்ப்பு கிடைத்தால் அதனை தவறவே விடமாட்டார். உறவினர்களுடன் உட்கார்ந்து எப்போதும் தப்லீக் செய்வார். துபையில் இருக்கும் போது இரு குடும்பங்களை பைஅத் செய்ய வைத்தார்.

அடுத்து **முகர்ரம் மஹ்மூது அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் மஜீத் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவான். ஷஹீது மர்ஹூமின் தாதா முகர்ரம் உமர்தீன் சாஹிப் மற்றும் கொள்ளுத்தாத்தா கரீம் பக்**ஷ்** சாஹிப் இருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார்கள். 1900 –ல் இவர்கள் பைஅத் செய்திருந்தனர். காதியான் அருகிலுள்ள கிராமத்தில் வசித்து வந்தார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு ஹிஜ்ரத் செய்து இங்கு ஷேகுபூராவில் வந்து தங்கினார். ஷஹாதத்தின் போது இவரது வயது 53. தாருஸ் ஸிக்ரில் 15

வருடமாக தாருஸ் ஸிக்ரின் கேட்டில் Security Guard ஆக பணியாற்றினார். தாருஸ் ஸிக்ர் பள்ளியில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். மஸ்ஜித் மெயின் கேட்டில் டியூட்டியில் இருந்தார். தீவிரவாதியைப் பிடிக்க முயன்றார். இம்முயற்சியில் இவர் மீது துப்பாக்கி சூடு நடந்தது. இரு குண்டுகள் மார்பில் பாய்ந்தன. மேலும் குண்டு வெடித்ததில் வயிற்றின் கீழ்ப்பகுதியிலும் காலிலும் குண்டு பாய்ந்தது. அதே இடத்தில் ஷஹீதானார்.

வீட்டினர் கூறுகின்றனர்: நல்ல சிறந்த மனிதர் – யாருடனும் சண்டை போடமாட்டார். எளிமையானவர்; சமாதானத்தை விரும்புவர். ஒரு நண்பர் கூறுகிறார்: ஷஹீது மர்ஹூம் சில நாள்களுக்கு முன்பு ராணுவ உடை அணிந்து கொண்டு மிடுக்காக சென்று கொண்டிருந்தார். ஏன் இப்படி போகிறீர்கள்? என்று ஒருவர் கேட்ட போது எவராவது தவறான எண்ணத்தோடு வந்தால் எனது சடலத்தைக் கடந்து தான் உள்ளே போக முடியும் என்றார். தனக்கு ஒரு குழந்தை வேணடும். அதனை வக்ஃபே நவ் திட்டத்தில் இணைப்பேன் என்று ஷஹீது மர்ஹூம் விரும்பினார். அல்லாஹ் அவரது துஆவை ஏற்று மூத்த மகனுக்கு 11 வருடத்திற்கு பிறகு ஒரு மகனை வழங்கினான். அவனை வக்ஃபே நவ் திட்டத்தில் சேர்த்துள்ளார்.

வீட்டினர் கூறுகின்றனர்: ஜுமுஆ நாளில் பணிகளின் காரணமாக வீட்டுக்குப் போன் செய்யவேயில்லை. ஷஹாதத்திற்கு 20 நிமிடங்கள் முன்பு போன் செய்து பேசினார். ஜுமுஆ நாளாயிற்றே எப்படி போன் செய்து விட்டீர்கள்? என்று நான் கேட்ட போது, எனது உள்ளம் விரும்பியது. எனவே ஒரு பணியாளிடம் போன் வாங்கி பேசுகிறேன் என்றார். எனவே இவ்வாறு பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. எனவே மீதியை அடுத்து கூறுவேன். இப்போது இன்னொரு விஷயம் கூறுவேன். அவரது ஜனாஸா காயிப் ஜுமுஆவிற்கு பிறகு தொழுவேன்.

முகர்ரம் சர்வர் சுல்தானா சாஹிபா, அப்துல் மாலிக் கான் சாஹிப் மர்ஹூம் உடைய மனைவி ஆவார். 22 ஜுன் 2010ல் தமது 87வது வயதில் நீண்டகால நோய்க்கு பிறகு வஃபாத் ஆகி விட்டார். இன்னாலிலவ்ஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். மஸீஹ் மவ்வூது (அலை) வுடைய சஹாபியான ஹஸ்ரத் மவ்லானா ஜுல்பிகார் அலிகான் சாஹிபின் மகனின் மனைவி. வாழ்நாள் முழுவதும் கணவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிவந்தார். வக்ஃபின் விருப்பத்தை நிறைவேற்ற முயன்றார். அவருக்கு மார்க்கப்பணியாற்றும் வாய்ப்பை அல்லாஹ் வழங்கியிருந்தார். லஜ்னா கராச்சி லஜ்னா ரப்வாவில் 48 வருடம் ஸதர் லஜ்னா ஹல்காவாக பணியாற்றினார். ஒரு முறை போர் காலத்தில் ஜமாஅத்தில் ரானுவத்தினருக்காக 1971ல் ஜமாஅத் பணிகளை செய்த போது அதில் பங்கெடுத்தார். ஒருவேளை இது 1965ல் நடந்ததாக இருக்கலாம். 3வது கலீஃபதுல் மஸீஹ் இடமிருந்து சான்றிதழும், மகிழ்ச்சியையும் பெற்றார். இவரது மகள் டாக்டர் நுஸ்ரத் ஜஹான் பேகம் உடைய கூற்று. இவரும் வக்ஃபே ஸிந்தகி. நல்ல பணிகளை இந்த நுஸ்ரத் ஜஹான் சாஹிபா செய்துள்ளார்கள். அல்லாஹ் இவரது வயதிலும் ஆரோக்யத்திலும் பரக்கத் தருவானாக. இவர் கூறுகிறார். 1953ல் நடந்த கலவரத்தில் நாங்கள் கராச்சி அஹ்மதிய்யா நூலகம் அருகில் ஒரு இரட்டை மாடி கட்டிடத்தில் தங்கியிருந்தோம். மேல்தளத்தில் அஹ்மதியல்லாத ஒரு குடும்பம் இருந்தது. அந்நாட்களில் மவ்லவி மலக்கான் சாஹிபாகிய எனது தந்தை வீட்டில் இல்லை. எதிரிகள் எண்ணையை ஊற்றி எங்கள் வீட்டை கொளுத்த திட்டமிட்டனர். அப்போது தாயார் எல்லா குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு துஆ செய்யத் தொடங்கினார்கள். இறைவனுக்கு இதுதான் விருப்பம் எனில் நாங்கள் அதில் திருப்தி கொள்கிறோம் என்றார். அப்போது இறைவன் நிலைமையை இவ்வாறு மாற்றினான். மேல்தளத்தில் குடியிருந்த அஹ்மதியல்லாதவர் கீழிறங்கி வந்தார். வீட்டை கொளுத்த முயன்றவர்களிடம், நாங்களும் இவ்வீட்டில் குடியிருக்கிறோம். எங்கள் வீடும் தான் சேர்ந்து எரியும் என்றனர். உடனே அவர்கள் அங்கிருந்து சென்று விட்டனர். அல்லாஹ் அருள்புரிந்தான்.

தமது குழந்தைகளைத் தவிர மற்ற எண்ணற்ற குழந்தைகளுக்கு குர்ஆன் ஓத கற்றுக் கொடுத்தார். மார்க்க போதனைகளை நல்லமுறையில் செய்தார். தமது நஃப்ஸுக்கு தியாகம் செய்துகொண்டு அடுத்தவரை கவனிப்பார். ஒவ்வொரு பிரச்சனைகளிலும் துஆ செய்வார். சந்தாக்களில் பேணுதல் உள்ளவர். எல்லா திட்டங்களிலும் அதிகமாக பங்கெடுக்க முயலுவார். ஆரம்பத்தில் மார்க்க அறிவு குறைவாக இருந்தது. ஆனால்

கற்றுக் கொள்வதில் நல்ல ஆர்வம் காட்டினார். விரைவில் தனது கணவரிடமிருந்து கற்றுக் கொள்ளும் வாய்பை பெற்றார். கணவர் ஒரு முபல்லிக். எனவே மிகவும் கண்ணியம் செய்வார். ஃபர்ல் தொழுகையுடன் நஃபில் தொழுகைகளையும் தொழுவார். குர்ஆனை மிகவும் ஆர்வமாக ஓதுவார். இறைவன் மீது தானும் நல்ல தவக்குல் வைத்திருந்தார். குழந்தைகளின் உள்ளத்திலும் இதனை பதிய வைத்தார். நல்லியல்பு, எளியவர். விருந்தோம்பல் பண்பு பெற்றவர். கிலாஃபத்துடன் விசுவாசம் உள்ளவர். அல்லாஹ்வின் அருளால் மூஸி ஆவார். இவரது கணவர் மவ்லவி அப்துல்மாலிக் கான் சாஹிப் மிகவும் பெரிய ஆலிம். நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் ஆகவும் முபல்லிக் ஆகவும் இருந்தார். அக்காலத்தில் இருந்த நெருக்கடியிலும் கணவனும் மனைவியும் கிடைத்த குறைந்த சம்பாத்தியத்தில் வீட்டை கழித்து வந்தனர். தாமும் காய்ந்ததை சாப்பிட்டு குழந்தைகளுக்கு நல்ல உணவு, கல்வியும் வழங்கினார். அல்லாஹ்வின் அருளால் இவர்களது குழந்தைகள் அனைவரும் நன்கு படித்தவர்கள். ஒரு மகன் அமெரிக்காவில் இருக்கிறார். ஜமாஅத் பணிகளை செய்து வருகிறார். இவர்களது ஒரு மகள் ஜமாஅத்துக்கு அர்ப்பணித்தவர், டாக்டர். அல்லாஹ் இவர்களது தகுதியை உணர்த்துவானாக. இவர் தம் நினைவாக நான்கு மகள்களையும் ஒரு மகனையும் விட்டுச்சென்றுள்ளார். இவரது மகள் நுஸ்ரத் ஜஹான் சாஹிபா ஃபஸ்லே உமர் ஆஸ்பத்திரியில் ரப்வாவில் பணியாற்றுகின்ற டாக்டர் லதீஃப் கோஹர் சாஹிபின் மனைவி ஆவார். ஒரு மகள்ஷவ்கத் சாஹிபின் மனைவி. இன்னொரு மகள் டாக்டர் சாலிஹ் அலாவுதீன் சாஹிப் என்ற காதியானின் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சதர் ஆக என்னால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மியான் வஸீம் அஹ்மத் சாஹிபின் வஃபாத்திற்கு பிறகு இவரை நான் நியமித்துள்ளேன். அவரது சொற்பொழிவுகளை கேட்டிருப்பீர்கள். நல்ல ஆலிம். இவரது மனைவி. இன்னொரு மருமகன் ஸையத் ஹுஸைன் அஹ்மத் முரப்பி. இவர் ஹஸ்ரத் மீர் இஸ்ஹாக் உடைய மகள்வழிப் பேரன் ஆவார். நான் ஏற்கனவே கூறியது போன்று இவரது ஜனாஸா தொழுகையை ஜும்ஆவுக்கு பிறகு நடத்துவேன். மற்றவர்களின் குறிப்பு இனியும் தொடரும். இன்ஷா அல்லாஹ்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 02.07.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**